# சொல்
## (பகாப்பதம், பகுபதம்)

ஓர் எழுத்து, தனித்தேனும் ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துகள் தொடர்ந்தேனும் ஒரு பொருளை உணர்த்துமானால், அது , சொல் எனப்படும்.

பதம், மொழி, கிளவி என்பன சொல் என்பதன் வேறு பெயர்கள். பதம் பகாப்பதம், பகுபதம் என இரு வகைப்படும்.

பகாப்பதம் :

பிரித்தால் பொருள் தராத சொல் பகாப்பதம் எனப்படும். பெயர், வினை, இடை, உரி ஆகியவற்றின் அடிப்படையில் பகாப்பதம் நான்குவகைப்படும்.

1. பெயர்ப் பகாப்பதம் – மரம், நாய், நீர்
2. வினைப் பகாப்பதம் – உண், காண், எடு
3. இடைப் பகாப்பதம் – தில், மன், பிற
4. உரிப் பகாப்பதம் – சால, நனி, கடி, உறு

( இடைச்சொல்லும் உரிச்சொல்லும் பகாப்பதங்களாகவே இருக்கும். )

பகுபதம் :

பகுதி, விகுதி, இடைநிலை எனப் பிரிக்கப்படும் பதம் பகுபதம் எனப்படும். ( பகுபதம் – பிரிக்கவியலும் பதம் ). பகுபதம் பெயர்ப்பகுபதம், வினைப்பகுபதம் என இருவகைப்படும்.

பெயர்ப்பகுபதம் : பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் எனும் ஆறன் அடியாகத் தோன்றுவது பெயர்ப்பகுபதம்.

(எ–டு): 1. பொன்னன் = பொன் + ன் + அன் ( ன் – இரட்டித்தது )
பொன் என்னும் பொருட்பெயர் அடியாகப் பிறந்தது.

2. ஊரன் = ஊர் + அன்
ஊர் என்னும் இடப்பெயர் அடியாகப்பிறந்தது.

3. ஆதிரையான் = ஆதிரை + ய் +ஆன் ( ய் – உடம்படுமெய் )
ஆதிரை என்னும் காலப்பெயர் அடியாகப் பிறந்தது.

4. கண்ணன் = கண் + ண் + அன் ( ண் – இரட்டித்தது )
கண் என்னும் சினைப்பெயர் அடியாகப் பிறந்தது.

5. கரியன் = கருமை + அன்
கருமை என்னும் பண்புப்பெயர் அடியாகப் பிறந்தது.

6. நடிகன் = ( நடி + க் +அன் ) ( க் – பெயரிடைநிலை )
நடித்தல் என்னும் தொழிற்பெயர் அடியாகப் பிறந்தது.

வினைப்பகுபதம் : பகுதி, விகுதி, இடைநிலை முதலியனவாகப் பகுக்கப்படும் வினைமுற்று, வினைப்பகுபதம் எனப்படும்.

செய்தான் = செய் + த் + ஆன்

செய்தான் என்னும் வினைமுற்றில் செய் என்னும் பகுதி தொழிலையும், த் என்னும் இடைநிலை இறந்தகாலத்தையும், ஆன் என்னும்விகுதி ஆண்பாலையும் குறிக்கின்றன.

பகுபத உறுப்புகள்

பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம் என்னும் ஆறு உறுப்புகளும் பகுபத உறுப்புகள் ஆகும்.

1. பகுதி : பகுபதத்தில் முதலில் நின்று பொருள் தரும் முதனிலையைப் பகுதி என்பர். பகுதி பெரும்பாலும் ஏவல் வினையாக வரும்.

| | | |
|---|---|---|
| படித்தான் | – | படி என்பது பகுதி |
| ஓடினான் | – | ஓடு என்பது பகுதி |
| வந்தான் | – | வா என்பது பகுதி |

2. விகுதி : பகுபதத்தில் இறுதியில் நிற்பது விகுதி எனப்படும். இது திணை, பால், எண், இடம் ஆகியவற்றைக் காட்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| நடந்தான் | – | ஆன் | – | ஆண்பால் விகுதி |
| நடந்தாள் | – | ஆள் | – | பெண்பால் விகுதி |
| நடந்தனர் | – | அர் | – | பலர்பால் விகுதி |
| நடந்தது | – | து | – | ஒன்றன்பால் விகுதி |
| நடந்தன | – | அ | – | பலவின்பால் விகுதி |

3. இடைநிலை : பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் வருவது இடைநிலை எனப்படும். இடைநிலை காலம் காட்டுவதனால் காலங்காட்டும் இடைநிலை எனவும் கூறுவர்.

அ) நிகழ்கால இடைநிலைகள்

கிறு, கின்று, ஆநின்று என்பன நிகழ்கால இடைநிலைகள்.

| | | |
|---|---|---|
| உண்கிறான் | – கிறு | = உண் + கிறு + ஆன் |
| உண்கின்றான் | – கின்று | = உண் + கின்று + ஆன் |
| உண்ணாநின்றான் | – ஆநின்று | = உண் + ஆநின்று + ஆன் |

ஆ) இறந்தகால இடைநிலைகள்

த், ட், ற், இன் என்பன இறந்தகால இடைநிலைகள்.

பார்த்தான் – த் = பார் + த் + த் + ஆன்

உண்டான் – ட்

வென்றான் – ற்

பாடினான் – இன்

இ) எதிர்கால இடைநிலைகள்

ப், வ் என்பன எதிர்கால இடைநிலைகள்.

உண்பான் – ப் உண் + ப் + ஆன்

வருவான் – வ் வா (வரு) + வ் + ஆன்

ஈ) எதிர்மறை இடைநிலைகள்

இல், அல், ஆ முதலியன எதிர்மறை இடைநிலைகள்.

உண்டிலன் – உண் + ட் + இல் + அன்

காணலன் – காண் + அல் + அன்

பாரான் – பார் + ஆ + ஆன்

4. சந்தி

பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வந்து சந்திக்க வைப்பது சந்தி. இது, சிலவிடங்களில் பகுதிக்கும் விகுதிக்கும் இடையிலும் வரும்.

பார்க்கிறான் – பார் + க் + கிறு + ஆன்

கடையார் – கடை + ய் + ஆர்

5. சாரியை

பெயர்ச்சொல்லையும் வினைச்சொல்லையும் சார்ந்து வருவது சாரியை எனப்படும். இஃது இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வரும்.

உண்டனன் – உண் + ட் + அன் + அன்

அன், ஆன், இன், அல், அற்று, இற்று, அத்து, அம் முதலியன சாரியைகள்.

6. விகாரம்

பகுதி, இடைநிலை, விகுதி போன்றவை சேரும்போது இடையில் ஏற்படும் மாறுபாடு விகாரம் எனப்படும்.

வந்தான் என்னும் சொல்லில் உள்ள வா என்னும் பகுதி வ எனக் குறைந்து விகாரம் ஆயிற்று.

பயிற்சி :

1. பின்வரும் சொற்களின் பகுதியை எடுத்தெழுதுக.

அ) கண்டான் ஆ) கேட்டான் இ) வந்தான் ஈ) எழுதினான்

2. தொடர்பில்லாத சொல்லை வட்டமிடுக.

அ) பார்த்தான், சொன்னான், பெற்றான், நடப்பான்.

ஆ) பாடுகிறாள், நடித்தார், நடிக்கின்றார், சிரிக்கின்றாள்.